# பாரதிய ஜனதா கட்சி
## 11, அசோக் சாலை, புதுடெல்லி 110001

### பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரான திரு. எம்.வெங்கையா நாயுடு வெளியிட்ட செய்தி அறிக்கை
### புதுடெல்லி, 21, பிப்ரவரி,2013

நாடாளுமன்றத்தில் இந்திய ஜனாதிபதி ஆற்றிய உரை மிகவும் ஏமாற்றமாகவும், நோக்கமற்றதாகவும், ஊக்கமற்றதாகவும் இருந்தது. தற்போது நாடு எதிர்கொண்டுவரும் சவால்களாக பிரமாண்ட ஊழல், வரலாறு காணாத விலை உயர்வு, விவசாயிகள் தற்கொலைகள், வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்னைகள் சவால்களாக முன்நிற்கின்றன. அவை தொடர்பாக ஜனாதிபதியின் உரையில் எதுவும் இல்லை. ஜனாதிபதியின் உரையில் பொருளாதார ரீதியான கடுமையான சிக்கல்கள் பேசப்பட்டது. நாட்டில் நிலவும் நிதிப்பற்றாக்குறை 5.5 சதவீதத்தை எட்டும் நிலையில், ஜிடிபி 5 சதவீதத்துக்கு சரிந்துள்ள நிலையில் என்னென்ன நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும் என்பதை அவரது உரை தொடவேயில்லை. அரசு திக்குதெரியாத நிலையில் இருக்கிறது. அதனால் தான் ஜனாதிபதி உரையும் எந்த ஊக்கமும் இல்லாமல் இருந்தது.

நாடாளுமன்றத்தின் மைய அவையில் நிகழ்த்தப்பட்ட ஜனாதிபதி உரையின் போது நடந்த விஷயங்கள் மிகவும் சோகமானவை. இதற்கு ஆளுங்கட்சி தான் பொறுப்பேற்க வேண்டும். ஆளுங்கட்சியின் கூட்டாளிகளே கையில் வாசகங்கள் எழுதப்பட்ட எதிர்ப்பு அட்டைகளைப் பிடித்துக்கொண்டு, ஜனாதிபதியின் உரைக்கு எதிராக கோஷங்களை எழுப்பியது இதுவரை நாடாளுமன்றம் காணாத நிகழ்வுகளாகும். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் எதுவுமே சரியில்லை என்று எதிர்கட்சிகள் எழுப்பி வரும் குற்றச்சாட்டை இந்தக் காட்சிகள் வலுப்படுத்துவதாக உள்ளது. காங்கிரசுக்கு கூட்டணி ஆட்சியை எப்படி நடத்துவதென்றும், இந்த நாட்டை எப்படி ஆள்வது என்றும் தெரியவில்லை என்பதையே இந்த விஷயங்கள் நிரூபணம் செய்கின்றன.

*****